# கிழக்கு வாசல்

# GATEWAY TO EAST

கிழக்கின்
அரசியல் பின்னணியும்
ஹிஸ்புழ்ழாஹ்வின்
25 வருட
அரசியல் பதிவுகளும்

**வாசலின் உள்ளே...**

**இலங்கை முஸ்லிம்களின் அரசியல் வரலாற்றில் கிழக்கு முஸ்லிம்கள்**

எம்.ஏ. ஜப்பார் *BA (Hons), M.Phil* & எம்.ஏ.எம்.பௌசர், *BA (Hons), MA*

**முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கத்தின் எழுச்சி**

எம்.எம்.பாஸில், *BA (Hons), M.Ps*

**முஸ்லிம் அரசியல் இயக்கத்தின் எழுச்சியின் பின்னணியில்**
**ஹிஸ்புழ்ழாஹ்வின் அரசியல் பிரவேசம்**

பேராசிரியர். எம்.ஏ.எம்.றமீஸ் *BA (Hons), M.Phil, PhD* & கலாநிதி. ஏ. றமீஸ் *BA (Hons), M.Phil, PhD*

**காத்தநகர் தந்த ஹிஸ்புழ்ழாஹ்: ஒரு வரலாற்றுக் குறிப்பு**

எம்.சீ.எம். ஷெரீப் *SLAS*

**அபிவிருத்தி அரசியலும் ஹிஸ்புழ்ழாஹ்வும்**

கலாநிதி. எஸ்.எம்.எம்.இஸ்மாயில் *MSc, PhD* & கலாநிதி ஏ.எம்.எம்.முஸ்தபா *BA (Hons), M.Phil, PhD.*

**இலங்கை முஸ்லீம்களின் அடையாளத்திற்கான பணிகள்:**

**மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி, பூர்வீக நூதனசாலை,** Batticaloa Campus-Sri Lanka **சில குறிப்புக்கள்**

எம்.ஐ.றைசுதீன், & ஏ.ஆர்.எம். நிப்றாஸ் *BSc (Hons), AMCSSL*

**தேசிய அரசியலும் சர்வதேச உறவுகளும்: ஹிஸ்புழ்ழாஹ்வின் ஈடுபாடு**

ஏ.பீ.எம். அலியார் (ரியாதி) *BA (Hons), MA* & எம்.றிஸ்வான் *BA (Hons), MA*

**ஹிஸ்புழ்ழாஹ் அமைத்த இன உறவுப் பாலம்**

பேராசிரியர் சோ. சந்திரசேகரன்

**ஹிஸ்புழ்ழாவின் வரலாற்று முக்கியத்துவமிக்க பாராளுமன்ற உரைகளின் பதிவுகள் சில**

எஸ்.எல். ஷியாட் அஹமட் (பாராளுமன்ற உதவி நூலகர்)

**ஹிஸ்புழ்ழாஹ் பற்றிய பத்திரிகைச் செய்திகள் சில**

எம்.ஐ.றைசுதீன்

# முஸ்லிம் அரசியல் இயக்கத்தின் எழுச்சியின் பின்னணியில் ஹிஸ்புழ்ழாஹ்வின் அரசியல் பிரவேசம்

பேராசிரியர் எம்.ஏ.எம்.றமீஸ், சிரேஷ்ட விரிவுரையாளர், மொழித் துறை
கலாநிதி ஏ.றமீஸ், சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானங்கள் துறை
இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

வர்த்தக சமூகமாகவே பெரும்பாலும் அறியப்பட்ட இலங்கை முஸ்லிம்கள் வரலாற்றில் மிக முக்கியமான பாத்திரத்திற்குரியவர்களாவர். இந்நாட்டு முஸ்லிம்களின் மிக முக்கியமான பண்பு புவியியல் ரீதியாக அவர்கள் நாடு முழுக்கப் பரந்திருப்பதாகும். அவ்வாறான பரம்பலில் சிங்கள மக்களுடனும் தமிழ் மக்களுடனும் மிக நெருக்கமாக வாழ்கின்ற இவர்கள் தமிழையே தமது தாய்மொழியாகக் கொண்டனர். சமூக, அரசியல், பொருளாதார நடவடிக்கைகளில் எல்லா இனத்தவர்களோடும் ஒன்றிணைந்தவர்களாகவே தமது வாழ்வினைக் கொண்டிருந்தனர். ஆரம்ப காலத்தில் அரசியல் ரீதியான ஒழுங்கமைப்புக்குள் தம்மை அதிகம் ஈடுபடுத்திக் கொள்ளாத இவர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே அத்தகையதொரு ஈடுபாட்டுக்குள் தம்மையும் இணைத்துக் கொண்டனர்.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் இலங்கை சுதேச சமூகங்களை விழிப்புணர்வடையச் செய்வதில் அனகாரிக தர்மபால, ஆறுமுகநாவலர், சித்திலெப்பை ஆகியோர் பெரும்பங்கு எடுத்தனர். அவ்வகையில் அறிஞர் சித்திலெப்பை முஸ்லிம் சமூகத்திற்கான அரசியல் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தினை அதிகம் வற்புறுத்தி வந்தார். இதன் காரணமாக 1889இல் முதன்முதலாக அரசியல் ரீதியாக இலங்கை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்தவர் எம்.சி. அப்துர்ரஹ்மான் ஆவார். இவர் முழுமொத்தமாக இலங்கை முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய போதும் 1898இல் கிழக்கிலங்கையைச் சேர்ந்த ஏ.எம். சரீப் என்பவர் இவ்விடத்திற்கு நியமனமாகின்றார். இதிலிருந்து தெற்கு முஸ்லிம்களோடு கிழக்கு முஸ்லிம்களும் இணைந்த ஒரு அரசியல் மரபு உருவாகிறது எனலாம்.

டொனமூர் அரசியல் திட்ட அமைப்புக் காலத்திலும் கிழக்கு முஸ்லிம்களுக்கு அரசியல் ரீதியாக அதிக முக்கியத்துவம் இருந்தது. இலங்கை சுதந்திரம் அடைந்ததிலிருந்து பின்னர் கட்சி ரீதியான அரசியல் மரபு உருவாக்கப்பட்டதற்குப் பின்னர் இலங்கை முஸ்லிம்கள் பல வழிகளிலும் தமது பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்திக் கொண்டனர். இலங்கையின் மூன்றாவது சமூகமாகத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட முஸ்லிம் சமூகம் இலங்கையின் தேசியக் கட்சிகளில் தமது பிரதிநிதித்துவங்களைப் பெற்றிருந்த போதும் இவர்கள் தேசிய நலனை விட தமது சமூகத்தின் தனித்துவமான நலன்களில் அக்கறை செலுத்தியிருக்கின்றார்களா? என்ற கேள்வி இருக்கின்றது. 1980கள் வரை இந்த வினா விமர்சனத்திற்குரியதாகவே இருந்து வந்தது. தனித்துவமான முஸ்லிம் அரசியல் இயக்கத்தின் தேவை உணரப்பட்டபோதும் அந்தத் தேவையினைப் பூர்த்தி செய்ய முடியாதவர்களாகவே முஸ்லிம்கள் காணப்பட்டனர்.

முஸ்லிம்கள் தமது சமூகத்தின் நலனைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகத் தேசிய கட்சிகளிலிருந்து அடிக்கடி கட்சி மாறுகின்ற பண்பைக் கொண்டிருந்தனர். இந்த நிலைப்பாட்டிலிருந்து கேட் முதலியார் எம்.எஸ். காரியப்பர் அவர்கள் தனித்துவமான ஓர் அரசியல் இயக்கமாக முஸ்லிம்களைக்

கொண்டுவருவதற்கு முனைந்தார். அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி என்ற பெயரிலே ஒரு கட்சியினை ஸ்தாபித்தார். அதற்காக அவர் வெளியிட்டிருந்த துண்டுப்பிரசுரம் வரலாற்றுப் பதிவுக்காக இங்கு எடுத்துக் காட்டப்படத்தக்கது:

"786

முஸ்லீம்களுக்கோர் வரப்பிரசாதம்!

இலங்கைச் சரித்திரத்தில் இதுதான் முதல் முறை!

அகில இலங்கை இஸ்லாமிய ஐக்கிய முன்னணி

அதன் சின்னம் சூரியன்

**முஸ்லீம் சகோதரர்களே!**

கடந்த வருடங்களாக, முஸ்லீம்கள் இலங்கைப் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்து வந்திருக்கிறார்கள். எனினும் ஒத்திக் குடிசையில் வசிப்பது போன்றும் இரவல் வீட்டில் குடியிருப்பது போன்றும் தமிழர்களின் கட்சி நிழலிலும் சிங்களவர்களின் கட்சி நிழலிலும் வாக்குரிமை (வோட்)களை எடுத்துக்கொண்டு போய், குறித்த கட்சிகளுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து, அக்கட்சித் தலைவர்களின் கட்டுப்பாடுகளுக்கு அமைந்தே கடமையாற்றி வந்துள்ளார்கள். இவ்விதம் அரசியல் அனாதைகளாக முஸ்லீம்களுக்கென ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சி இல்லாமையால் அதிகமான அவமானங்களுக்குள்ளாக்கப்பட்டார்கள். அது மட்டுமா? சிங்களவர்களின் கட்சியிலிருப்போர்களைச் சிங்கள முஸ்லீம்கள் என்றும் தமிழர் கட்சியிலிருப்போர்களைத் தமிழ் முஸ்லீம்கள் என்றும் நமக்குள் வேற்றுமைகள் உண்டாக்கப்பட்டும் பிரித்துவிடும் சூட்சிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும் நமக்கென ஒரு அரசியல் கட்சி இல்லாதிருந்ததால் தமிழரசுக்கட்சி முஸ்லீம்கள் தங்கள் சாதியில் ஒரு பிரிவினைச் சேர்ந்தவர்கள் தான் என்றும் மதத்தால் மட்டும் வேறுபட்டிருக்கிறோம் என்றும் பொய்ப் பிரசாரத்தை நடத்திக்கொண்டு வருகிறார்கள். இப்பிரச்சாரம் காரணமாக, இந்தத் தேசத்தில், சிங்களவர், தமிழர் எனும் இரண்டு சாதியினர் மட்டும் தான் இருப்பதாக ஏமாற்றப்படும் சந்தர்ப்பங்களும் இடைக்கிடையே காணப்படுகிறது. ஆனால் இலங்கை வாழ் முஸ்லிம்கள் ஓர் தனிப்பட்ட கலாச்சாரம், தனிப்பட்ட கோட்பாடுகள், தனிப்பட்ட மார்க்கம் உண்டு எனவே இன்நாட்டில் இரண்டல்ல மூன்று பெரும் சமுதாயங்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதை அரசியல் அரங்கங்களில் எடுத்துக்காட்டவும் நம் சமுதாயத்தில் சரிசம பங்குரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் நமது சாதியினர் விரும்புவதில் எவ்வித தவறுமில்லை. கடந்த பல வருடங்களாக அடைந்த இன்னல்களையும் இழந்த நமது உரிமைகளையும் பெற்றுக்கொள்ளவும் நமது சமுதாயமும் ஒரு தனிப்பட்ட சமுதாயம் என்பதை நிலைநாட்டி இலங்கை முஸ்லிம்கள் அரசியல் விழிப்பு அடைந்திருக்கிறார்கள் என்பதை எமது சகோதர இனத்தவர்களுக்கும் வெளிதேசத்தார்களும் எடுத்தோதுவதற்காக எல்லாம் வல்ல இறைவனின் கடாட்சத்தால் "அகில இலங்கை இஸ்லாமிய முன்னணி" என்னும் ஒரு அரசியல் கட்சி பதிவு செய்யப்பட்டு இலங்கை அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது முஸ்லீம்கள் இனிமேல் அக்கட்சி மூலம் பாராளுமன்றத் தேர்தலுக்குப் போகலாம். பாராளுமன்றத்திற்குள் சிங்களவர், தமிழர்களின் அரசியல் கட்சிகளுக்கு எவ்விதம் கதிரைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அவ்விதம் நமது கட்சிக்கும் கதிரைகள் ஒதுக்கப்படும். அப்போது பிரதிநிதிகள் தனிப்பட்ட கீர்த்தியுடனும் சுயமரியாதையுடனும் நமது கட்சிக்கெனக் கொடுக்கப்படும். இடத்தில் ஒரே முகமாக அமர்ந்து கடமையாற்ற முடியும். மேலும் இக்கட்சியின் முக்கிய நோக்கங்களில் ஒன்று இலங்கை சிங்கள நாடெனவும் பிரிவினை செய்யப்படும்போது இஸ்லாமில்தான் என்று மூன்றாவது நாடு ஏற்பட வேண்டும் என்பதாகும். எனவே, எனது அருமை முஸ்லீம் சமுதாயமே வாழ்வும் நம்கையில் தங்கியுள்ளது. எதிர்காலத்தில் நமது முஸ்லீம் சமுதாயத்தின் முன்னேற்றம் கருதி, அகில இலங்கை இஸ்லாமியர்களுக்காக, இலங்கை சரித்திரத்தில் இதற்கு முன்பு என்றுமே கண்டிராத இஸ்லாமியரின் ஒரே கட்சியாகிய இக்கட்சியில் சேர்ந்து சமூக நலனுக்குப் பாடுபடுமாறும் உள்ளக்கழிப்புடன் உதவி புரியுமாறு பணிவாகக் கேட்டுக் கொள்கிறோம். இவ்விதம் செய்வீர்களானால் மற்றச் சாதியினரும் நம்மை மரியாதையுடன் ஆதரிப்பார்கள் என்பது உறுதி.

## அடிப்படை
## கட்சியின் நோக்கங்கள்

01. இலங்கை ஒன்பது மாகாணங்களிலும் பரந்து வாழும் இஸ்லாமியர்களை ஒன்று திரட்டி, இன்நாட்டு முஸ்லீம்களின் ஏகோபித்த ஒரே குரலைக் கொடுக்கும் ஒரு கட்டுப்பாடான இஸ்தா-பனமாகக் கடமை புரிதல்.

02. எங்கள் மதாச்சாரம், கலாச்சாரம்இ அரசியல், பொருளாதாரம் போன்ற இன்னோரன்ன துறைகளில் அபிவிருத்தி ஏற்படுத்தாவிடில் வாழும் ஏனைய சமுதாய மக்களுடன் சரிநிகர் சமா-னமாக வாழும் உரிமையை நிலைநாட்டுதல்.

03. இன்நாட்டு இஸ்லாமியர்களின் குடியியல், அரசியல் உரிமைகள் கடந்த காலத்தில் இழக்க-ப்பட்டதை மீட்டல், எதிர்காலத்தைப் பாதுகாத்தல்.

04. சர்வதேச முஸ்லீம் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி, அதன் மூலம் எங்களின் நிலைமையைச் சகல துறைகளிலும் வளர்த்தல்.

05. காலத்திற்குக் காலம் இலங்கையில் வாழும் ஏனைய சமுதாயங்களுடன் ஏற்படும் கருத்து வேற்றுமைகளுக்கும் இன மத வேறுபாடுகளின் காரணமாக, ஏற்படும் நெருக்கடியான சூள்நிலை-லகளுக்கும் தகுந்த பாதுகாப்பை ஏற்படுத்தும் முகமாக வாழ்க்கை நடத்தவும் எதிர்காலத்தில் ஓர் ஐக்கிய இலங்கை உருவாகவும் உழைத்தல், இக்கருத்து நிராகரிக்கப்பட்டு, சிங்களவர்களுக்-குச் சிங்கள நாடும் தமிழர்களுக்குத் தமிழ் நாடும் எனப்பிரிவினை ஏற்படின், “இஸ்லாமிஸ்தான்” எனும் முஸ்லிம் இராட்சியம் ஒன்றைப் பிரித்தெடுத்து இங்கு வாழ் சுமார் ஏழு லெட்சம் இஸ்லா-மியர்களுக்கு ஒரு தாயகத்தை ஏற்படுத்திக் கொள்ளல்.”

ஆனால், அவரே **1962**ஆம் ஆண்டு தேர்தலிலே இக்கட்சியினைக் கைவிடுகின்றார். முஸ்லிம் லீக் முதலானவைகள் உருவாக்கப்பட்டு தேசிய கட்சிகளினுடைய அமுக்கக் குழுக்களாகவே அவை செயற்பட்டன. இக்காலகட்டத்திலே வடகிழக்கு அரசியலிலே பெருமளவு செல்வாக்குப் பெற்றிருந்த தமிழரசுக் கட்சியின் துணைக் குழுக்களாகவும் முஸ்லிம்கள் செயற்பட்டனர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி முதலானவற்றின் மூலம் முஸ்லிம்களின் பிரதிநிதியாகத் தன்னை இனங்காட்டிக் கொள்ள முஸ்லிம் சமூகத்திலிருந்து எம்.எச்.எம். அஷ்ரஃப் என்ற இளம் சட்டத்தரணி ஒருவரும் பெரிதும் முயன்றார். ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆகியனவே இக்காலகட்டத்திலும் முஸ்லிம்களிடம் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆனால், **1977**இற்குப் பின்னர் இலங்கைச் சிறுபான்மைச் சமூகங்கள் மிக நெருக்கடியான கட்டத்தினை அரசியல் ரீதியாக எதிர்கொள்கின்றனர். இதனுடைய விளைவாக இலங்கையில் சிங்கள – தமிழ் முரண்பாடு என்பது சிங்கள – தமிழ் – முஸ்லிம் முரண்பாடாகவும் பரிமாணமடைகிறது. இக்காலகட்டத்தில் முஸ்லிம் அரசியல் இயக்கம் ஒன்றின் தேவை மிகக் காரசாரமாக உணரப்பட்டது.

**1986**ஆம் ஆண்டு இலங்கை சிங்கள – தமிழ் முரண்பாட்டினைத் தீர்க்க ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள் சர்வகட்சி மாநாடு ஒன்றைக் கூட்ட வருகிறபோது அதில் முஸ்லிம்களுடைய வெற்றிடம் மிகத் தெளிவாகத் தெரியவந்தது. அக்கட்டத்தில்தான் முஸ்லிம்களின் மத்தியிலிருந்து தனித்துவமானதொரு அரசியல் இயக்கம் பெயர் பெறத் தொடங்கியது. தேசிய கட்சிகளிலும் தமிழரசுக் கட்சியிலும் முஸ்லிம்களின் அரசியல் தாகத்தைத் தீர்க்க முற்பட்ட சட்டத்தரணி எம்.எச்.எம். அஷ்ரஃப் தான் சார்ந்திருந்த முஸ்லிம் சமய பிரச்சார இயக்கங்களின் அபிலாசைகளுக்கு அப்பால் முஸ்லிம்களுக்கான

அரசியல் இயக்கம் ஒன்றை ஸ்தாபிப்பதற்குத் துணிச்சலோடு முன்வந்தார். இந்தத் துணிச்சலுக்கு அக்காலகட்டத்தில் நிலவிய சூழ்நிலையே இடம் அமைத்துக் கொடுத்தது எனலாம்.

தேசிய அரசியல் இயக்கங்களின் செல்வாக்கு ஒருபுறம் இருக்க முஸ்லிம்கள் தமது அரசியல் நலன்களை அல்லது தமது முகவரியை தமிழ் அரசியல் சமூகத்தோடு புதைத்திருந்த ஒரு வரலாறும் இருக்கின்றது. எனவே 1981ஆம் ஆண்டைய மாவட்ட அபிவிருத்தி சபைக்கான தேர்தல் முனைப்புகளிலே தமிழ் சமூகத்தோடும் அஷ்ரஃப் அவர்கள் முரண்பட்டுக்கொண்ட வரலாறு இருக்கிறது. இது ஒரு சிறு காரணமாகவிருக்க, தமிழ் சமூகத்தின் விரோதிகளாக அரச படைகளை மாத்திரம் கொண்டிருந்த தமிழ் இயக்கங்கள் முஸ்லிம்களுக்கு எதிராகவும் தமது எதிர்ப்புணர்வுகளை வெளிப்படுத்தத் தொடங்கியதன் விளைவாகவும் முஸ்லிம்களின் அரசியல் இயக்கத்திற்கான தேவை வலுப்பெறலாயிற்று. எனவே குறிப்பிட்டபடி சர்வகட்சி மாநாட்டிற்கான வெற்றிடத்தில் முஸ்லிம்களின் அரசியல் கட்சிகளுக்கான வெற்றிடமும் உணரப்பட்டு மேற்கூறிய காரணங்களால் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் என்ற அரசியல் இயக்கம் 1986ஆம் ஆண்டு காத்தான்குடியிலே ஸ்தாபிக்கப்பட்டது. இந்த ஆரம்பம் ஹிஸ்புழ்ழாஹ்வின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமானதென்று கருதவேண்டியிருக்கிறது.

மிக நெருக்கமாக ஒன்றோடொன்று ஒத்து வாழ்ந்திருந்த கிழக்கிலங்கை தமிழ் – முஸ்லிம் சமூகம் சந்தேகத்தோடு ஒருவரையொருவர் நோக்குகிறகாலகட்டத்தில் முஸ்லிம் செல்வந்தர்களும் புத்திஜீவிகளும் ஊர்காவற்படை வீரர்களும் பொதுஜனங்களும் கொல்லப்படுகிற சூழ்நிலையில் முஸ்லிம்களின் மானமும் மரியாதையும் உடைமைகளும் சூறையாடப்படுகின்ற சூழ்நிலையில் அம்மக்களது பாதுகாப்புக்கும் உரிமைகளுக்குமான இயக்கமாக முஸ்லிம் காங்கிரஸ் தோற்றம் பெறுகிறது. மிகச் சாதாரணமான பொருளாதாரப் பலமும் சிந்தனைப் பலமுமிக்க சாமான்ய முஸ்லிம் மக்களிடையே மிகக் காத்திரமான முறையில் அஷ்ரஃப் தனது இன, மத முகவரியூடாக முஸ்லிம்களை அரசியல் மயப்படுத்தினார். முஸ்லிம்களின் உயிரோடு பின்னிப்பிணைந்திருந்த குர்ஆனும் ஹதீஸும் முஸ்லிம் காங்கிரஸின் யாப்புப்போல பேசப்பட்டது. முற்றிலும் இஸ்லாமிய மயப்பட்ட சிந்தனைகளோடும் இன ரீதியான உணர்வுகளிலும் மூச்சுக்கொண்டெழுகின்ற காத்தான்குடி முஸ்லிம்களிடமிருந்து எழுந்த துடிப்புள்ள ஒரு இளைஞனான ஹிஸ்புழ்ழாஹ்வுக்கும் இது சாதகமாகியது.

காத்தான்குடி முஸ்லிம் சமூகம் முற்றிலும் வர்த்தகமயப்பட்ட ஒரு சமூகம். இந்தச் சமூகத்திற்கு மத்தியில் சமூக நலனையும் கல்வியையும் ஆயுதமாகக் கொண்ட ஒரு இளைஞன் அரசியல் ரீதியாக இந்தச் சமூகத்தை வழிநடாத்துவதற்கு அப்போதுதான் தோற்றம் பெற்றிருந்த முஸ்லிம் இயக்கமான முஸ்லிம் காங்கிரஸைப் பயன்படுத்திக் கொள்ளத் துணிந்தார். கிழக்கு முஸ்லிம்களைக் கழுத்துவரை நெருக்கிய தமிழ் பேரினவாதச் சூழ்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் மூலம் ஹிஸ்புழ்ழாஹ் வெளியே வருவது எவ்வளவு தூரம் பொருத்தமாக அமைந்ததோ அவ்வளவு தூரம் பொருத்தமற்றதும் தான். இந்தக் கட்டத்தில் அம்பாறை மாவட்டத்திற்குள் மாத்திரம் வீச்சோடு செயற்பட வந்த முஸ்லிம் காங்கிரஸை மட்டக்களப்பு மாவட்டத்திலும் - கிழக்கு மாகாணத்திலும் - தேசிய ரீதியாகவும் பிரபல்யமடையச் செய்ததில் ஹிஸ்புழ்ழாஹ்வுக்குப் பெரும்பங்கு இருந்தது. அப்போது கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்த மாணவர்களினூடாக அஷ்ரஃப் தேசிய ரீதியாக இக்கட்சியினை பலப்படுத்த எடுத்த முயற்சிக்கு மிகப் பக்கபலமாகவும் காத்திரமாகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஹிஸ்புழ்ழாஹ் செயற்பட்டார்.

1987இலும் காத்தான்குடியின் உள்ளூர் அரசியலில் முஸ்லிம் காங்கிரஸினூடாக ஹிஸ்புழ்ழாஹ் வெளியே வருகிறார். ஆனால் அந்தச் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக அத்தேர்தல் இடம்பெறவில்லை. அவ்வேளை மிக மோசமான தமிழ் – முஸ்லிம் முரண்பாடு அப்பிரதேசங்களிலே இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அப்போதெல்லாம் ஹிஸ்புழ்ழாஹ் மிகத் தீவிரமாக முஸ்லிம் காங்கிரஸைத் தமது சமூகத்திற்கு மத்தியில் அறிமுகப்படுத்துவதில் மிகுந்த அக்கறை செலுத்தியிருந்தார். தனது சமூகத்திற்கு ஹிஸ்புழ்ழாஹ் புதிய செய்தியினை எத்திவைத்தார். 1988ஆம் ஆண்டு இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் அதிக வாக்குகளைப் பெறுவதற்கு அவர் அயராது உழைத்தார். பின்னர் அக்கட்சியின் மாகாணசபைக்கான எதிர்க்கட்சித் தலைவராக நியமனம் பெறுகின்ற அளவுக்கு கட்சியினுடைய விசுவாசத்தை அவர் பெற்றிருந்தார்.

இத்தனைக்கும் மத்தியில் 1989இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் மிக இளமையான பாராளுமன்ற உறுப்பினராக அவர் தெரிவு செய்யப்பட்டார். தேசிய அரசியலில் அஷ்ரஃப் தன்னை ஒரு பெரும் தலைவனாக இனங்காட்டிக்கொண்டது போல மட்டக்களப்பு மாவட்ட மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்வதில் ஹிஸ்புழ்ழாஹ் மிகப் பெரும் சக்தியாக மாறினார். அப்போது இலங்கையின் ஜனாதிபதியாக இருந்த பிரேமதாஸவை நேரடியாகத் தொடர்பு கொண்டு விடுதலைப் புலிகளின் வேட்டைகளுக்குள் அகப்பட்டிருந்த முஸ்லிம்களை மீட்பதிலே மிகத் துணிச்சலுடன் செயற்பட்டிருந்தார். மீண்டும் 1994ஆம் ஆண்டுத் தேர்தலிலும் ஹிஸ்புழ்ழாஹ் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் இலக்குகளை அடைவதில் தலைவர் அஷ்ரஃப் அவர்களுக்கு மிகவும் பக்கபலமாக இருந்து செயற்பட்ட ஹிஸ்புழ்ழாஹ் அவர்கள் வழமையான அரசியல் கட்சிகளுக்குள் இடம்பெறுகிற முரண்வினைகளுக்கு மத்தியில் தலைவரோடு முரண்பாடடைகின்ற ஒரு சூழ்நிலைக்கு வருகின்றார்.

1991இல் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைச் சுழற்சி முறையாகப் பகிர்ந்துகொள்வதில் கட்சித்தலைவருக்கும் அவருக்குமிடையில் முரண்பாடு ஏற்படுகின்றது. காத்தான்குடி மக்களின் விருப்புக்கு மாறாக கட்சியிலிருந்து குறுகிய காலம் இடைநிறுத்தப்பட்ட அவர் மீண்டும் கட்சியினுடைய முக்கிய உறுப்பினராக இணைந்து செயற்படுகிறார். அக்காலகட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தின் முஸ்லிம் காங்கிரஸ் தேர்தல் நடவடிக்கைகளின் பொறுப்பாளராக இருந்து செயற்பட்டார்.

பிரதி தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சராகக் கடமையாற்றிய அவர் மிகக் காத்திரமான அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஹிஸ்புழ்ழாஹ் கலாசார மண்டபத்தை அவர் ஸ்தாபித்தபோது கட்சிக்குள் எரிச்சலுக்கும் புகைச்சலுக்குமுள்ளே வாழ்கின்ற ஒருவராக மாறுகின்றார். இந்தக் காலட்டத்தில்தான் தலைவர் அஷ்ரஃபின் மரணமும் முஸ்லிம் காங்கிரஸின் சோதனை காலமும் உருவாகிறது. இந்த முரண்பாட்டுச் சூழ்நிலைக்குள்ளே முஸ்லிம் காங்கிரஸிலிருந்து ஹிஸ்புழ்ழாஹ் மாத்திரம் அகப்பட்டுக் கொள்ளவில்லை. சேகு இஸ்ஸதீன் அவர்களும் அகப்பட்டுக் கொள்கிறார்கள். இந்நிலைமை விமர்சனத்துடன் கூர்மையாகப் பார்க்கப்பட வேண்டியது.

2000ஆம் ஆண்டு பொதுத் தேர்தலை எதிர்கொள்கின்ற சூழ்நிலையிலே தலைவர் அஷ்ரஃப் அவர்கள் தனது முஸ்லிம் அரசியல் பாதையிலே நிலைமாற்றம் கொள்கிறார். தேசிய ஐக்கிய முன்னணி என்ற ஒரு கட்சியினை ஸ்தாபித்து அதனுடைய தலைவராக அஷ்ரஃப் அவர்களும் அதனது முதலாவது செயலாளராக எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புழ்ழாஹ் அவர்களும் நியமனம் பெறுகின்றார். இந்தக் கட்சியினுடைய ஒரு தேவைப்பாடு குறித்தும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை தேசிய ஐக்கிய முன்னணியாக மாற்றம் பெறச் செய்வதிலும் ஹிஸ்புழ்ழாஹ் அவர்கள் தொடர்ச்சியாகத் தலைவரோடு முரண்பட்ட கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். பின்னர் தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் பதவியையும் தலைவர் இராஜினாமாச் செய்யச் சொன்னபோது அதனையும் மேற்கொண்டார். இந்தக் காலகட்டத்தில் எல்லாம் முஸ்லிம் அரசியல் இயக்கம் தனித்துவமானது என்பதிலேதான் ஹிஸ்புழ்ழாஹ் மிகத் தெளிவாக இருந்து செயற்பட்டார். தலைவருடைய மரணத்திற்குப் பின்னர் இந்தக் கட்சிகள் இரண்டும் இரண்டாகச் செயற்பட வேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டது.

தலைவர் அஷ்ரஃப் அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர் 2000 ஆண்டுப் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியோடு சேர்ந்து போட்டியிட்டு தோல்வியடைந்த ஹிஸ்புழ்ழாஹ் மீண்டும் தேசிய ஐக்கிய முன்னணி சேர்ந்து போட்டியிட்டு வெற்றி பெறுகிறார். மீண்டும் 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே தேசிய ஐக்கிய முன்னணி தோல்வியுற்றதன் காரணமாக இலங்கை விமான நிலையத்தினுடைய தலைவராக இருந்து செயற்படுகிறார். இக்காலகட்டத்தில் சுனாமிக்கான மீள்கட்டுமான பணிகளில் (P-TOMS) முஸ்லிம்களுக்கான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத சந்தர்ப்பத்திலே விமான சேவைத் தலைவர் பதவியினை விட்டும் தூரமாகிற நிலைமைக்கு வருகிறார்.

2008ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபைத் தேர்தலிலே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் ஹிஸ்புழ்ழாஹ்வுக்கும் இடையில் முதலமைச்சர் விவகாரம் தொடர்பாகப் பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்ட போதும் கட்சியிலேதான் இருப்பது என்று முடிவெடுத்திருக்கின்ற சூழ்நிலையிலே சர்வதேச இஸ்லாமிய நிவாரண அமைப்பிலே இடம்பெற்ற புத்தி ஜீவிகள், உலமாக்களின் ஆலோசனைகளோடும்

இறுதிவரை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவத்தோடும் உடன்பாடு காணமுடியாத சூழ்நிலையிலே அதே மதத் தலைவர்களின் புத்திஜீவிகளினது ஆலோசனைகளோடு அரச சார்பிலே போட்டியிட்டு வெற்றியீட்டினார். பின்னர் கிழக்கு மாகாணசபையின் முக்கிய அமைச்சராக இருந்து 2010ஆம் ஆண்டு தேர்தலின் பின் பாராளுமன்ற உறுப்பினராகவும் சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார பிரதியமைச்சராகவும் 2013ஆம் ஆண்டில் அமைச்சரவை மாற்றத்திலே பிரதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகவும் கடமையேற்றார்.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் பாதையிலே தெளிவான நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கின்ற அவர் முஸ்லிம்களுக்கான தனித்துவமான இயக்கம் ஒன்றே முஸ்லிம்களின் அரசியல் தேவையினை நிறைவு செய்யக்கூடியது என்பதிலே மிக உறுதியாக உள்ளார். 'பல கட்சிகள் உருவாகியபோதும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சரியான பாதையில் பயணிக்க வேண்டும் அந்தப் புதியதோர் பாதையில் நாம் ஒன்றுபட வேண்டியிருக்கிறது' என்று அவர் கூறுவது முஸ்லிம் அரசியல் இயக்கத்தின் எழுச்சியிலே அவருக்கு மிகப்பெரும் பங்கிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகின்றது. இருந்தபோதும் அஷ்ரபின் மறைவுக்குப் பின்னர் கட்சி அரசியல் என்பதனை விட சமூக அரசியல் என்ற அழுத்தத்திலேயே தனது அரசியல் பயணத்தை அவர் மேற்கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து மீண்டும் தெரியவருவது முஸ்லிம்களுடைய அரசியல் இயக்கம் முறையாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டியதன் அவசியமே. அதுவரை ஹிஸ்புழ்ழாஹ்வின் சமூக அரசியல் பயணம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதும் இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு விமோசனம் தரக்கூடியதும் ஆகும்.